DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.422/2017**

**P.W.4**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | சங்கரநாராயணன் |
| Father Name | : | ராஜகோபாலன் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.07.2025.

(1, 2, 5 மற்றும் 6 எதிரிகள் ஆஜர். 4 வது எதிரி ஆஜர் இல்லை, 4 வது எதிரி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 3 வது எதிரி இறந்துவிட்டார் )

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>

நான் தற்போது தல்லாகுளம் போக்குவரத்து பிரிவில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிகிறேன். இந்த வழக்கு சம்பவ சமயத்தில் திடீர் நகர் சட்டம் ஒழுங்கு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்தேன். அ.சா.2 திருமலைக்குமார் தல்லாகுளம் போக்குவரத்து பிரிவில் உதவி ஆணையாளராக பணியில் இருந்தார். கடந்த 03.01.2016 ம் தேதி நான், தலைமை காவலர் 1674 முருகன், தலைமை காவலர் 237 பால் கின்சிலி ஆகியோர்கள் காலை 8 மணி முதல் மதுரை பெரியார் பேருந்து நிலையம் அருகிலுள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களின் 257 வது ஜெயந்தி விழாவை முன்னிட்டு பாதுகாப்பு பணியில் இருந்தோம். அந்த சமயத்தில் திலகர் திடல் உதவி ஆணையாளர் அ.சா.3 பீர் முகைதீன் என்பவரிடம் அறிக்கை செய்து பாதுகாப்பு பணியில் இருந்தேன். சுமார் 01.15 மணியளவில் TN 65 E 2325 என்ற பதிவெண் கொண்ட டாடா சுமோ காரில் பழந்தமிழர் மக்கள் கட்சியை சேர்ந்த மோகன் என்ற வீரக்குமார் என்பவர் தலைமையில் கட்டபொம்மன் சிலைக்கு மாலை

அணிவிக்க வந்தார்கள். அந்த சமயத்தில் போலிஸ் போட்டோ வீடியோகிராபர் அ.சா.1 பாண்டிச்சாமி என்பவர் சம்பவங்களை வீடியோ எடுத்துக்கொண்டிருந்தார். அப்போது அவரை பார்த்து, மேற்படி காரில் வந்த கும்பல் தகாத வார்த்தைகள் பேசி, எங்களை ஏன் வீடியோ எடுக்கிறீர்கள் என்று கூறி, கற்களைக் கொண்டு எறிந்து, அவரையும் தாக்கினார்கள். அப்போது அவர் வைத்திருந்த வீடியோ கேமரா சேதமடைந்தது. அப்போது உதவி ஆணையாளர் திரு.பீர் முகைதீன் அவர்கள் உத்தரவுப்படி கூட்டத்தை கட்டுப்படுத்தினோம். அந்த கல்வீச்சில் உதவி ஆணையாளர் பீர் முகைதீன் அவர்களுக்கு முன் கையில் ரத்தக்காயம் ஏற்பட்டது. போக்குவரத்து உதவி ஆணையாளர் திரு.திருமலைக்குமார் அவர்களுக்கு இடது கணுக்காலுக்கு மேல் கல் பட்டு ரத்தக்காயம் ஏற்பட்டது. எஸ்.எஸ்.காலனி காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.ரவிச்சந்திரன் அவர்களுக்கும் முன்கையில் கல் பட்டு ரத்தக்காயம் ஏற்பட்டது. மேலும் கலவரம் செய்வர்களை பிடிக்கச் சென்ற போது, அங்கிருந்து மோகன் என்பவர் தப்பி ஓடிவிட்டார். பின்னர் ஐந்து நபர்களை பிடித்து திடீர் நகர் சட்டம் ஒழுங்கு காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு.செல்வராஜ் அவர்களிடம் ஒப்படைத்தோம். காவல் ஆய்வாளர் திரு.துரைப்பாண்டி அவர்கள் என்னை விசாரித்தார்.

<u>1 மற்றும் 6 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

சம்பவ தினத்தன்று பாதுகாப்பு பணியில் சுமார் 10 போலிசார் இருந்தோம். வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களின் சிலையை சுற்றி தடுப்பு வேலி போடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். அன்றைய தினம் சுமார் 1000லிருந்து 1500 நபர்கள் கூட்டமாக வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களின் சிலையை சுற்றி இருந்தார்கள். கூட்ட நெரிசல் அதிகமாக இருந்ததாலும், வேறு காரணங்களுக்காகவும் தடியடி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். தடியடி உத்தரவு பிறக்கப்பட்டவுடன் நாலாபுறமும் மக்கள் சிதறி ஓடினார்கள் என்றால் சரிதான். மேற்படி தடியடியில் ஏற்பட்ட தள்ளுமுள்ளு காரணமாக எனது உயர் அதிகாரிகளுக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரிதான்.

<u>**2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**</u>

1 மற்றும் 6 எதிரிகள் தரப்பு அறிவார்ந்த வழக்கறிஞர் மேற்கொண்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக 2ம் எதிரி தரப்பு அறிவார்ந்த வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது.

<u>**4 மற்றும் 5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–**</u>

1 மற்றும் 6 எதிரிகள் தரப்பு அறிவார்ந்த வழக்கறிஞர் மேற்கொண்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக 4 மற்றும் 5 எதிரிகள் தரப்பு அறிவார்ந்த வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது.

<u>**மறு விசாரணை –**</u> இல்லை.